**07.01.2025**

**அ.வ.எண்.101 /2020**

**<u>வா.சா.1 காளி அவர்களின் குறுக்கு விசாரணை</u>**

1. எதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பொது வழியில் பிரதிவாதி 3 அடி தள்ளி கட்டிடம் கட்டி உள்ளதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். எனது பிராதுவில் சொல்லியுள்ள சொத்து அட்டவணை குறித்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாததால் எனக்கு தெரியாது. தாவா சொத்து அண்டைவாக்கம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. பொது பாதையின் சர்வே எண் எனக்கு தெரியாது. நான் சொல்கின்ற பொது பாதை பிரதான சாலையிலிருந்து வடக்கு தெற்காக செல்கிறது என்றால் சரிதான். அது 7 அடி அகலம் 200 அடி நீளம்.

2. மேற்படி பொது வழி எங்கு போய் முடிகிறது என்றால் திறந்த இடத்தில் முடிகிறது. மேற்படி பொது வழி முடிகிற இடத்தில் மற்றொரு சாலை உள்ளது என்றால் சரிதான். பொது பாதை முடிகிற இடத்தில் வீடு எதுவும் இல்லை என்றால் வீடு இருக்கிறது. பொது பாதை முடிகிற இடத்தில் பள்ளி மதில் சுவர் உள்ளது என்றால் அங்கு பட்டா நிலம் உள்ளது. மேற்படி பொது பாதையை அங்கு இருக்கும் அனைவரும் பயன்படுத்துகிறார்கள் என்றால் சரிதான். அதில் எனக்கு தனிப்பட்ட உரிமை இல்லை என்றால் சரிதான். பொது பாதையில் எனது வீடு தவிர பிரதிவாதி வீடும் உள்ளது. பொது பாதை சம்பந்தமாக எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே 2000 ம்

வருடத்திலிருந்து பிரச்சனை இருக்கிறது.

3. பொது பாதை கட்டிடம் கட்ட வேண்டாம் என்று 2000ம் வருடத்திலிருந்தே நான் சொல்லி வருகிறேன். ஆனால் பிரதிவாதி கேட்கவில்லை. பிரதிவாதி மீது புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்யும் தேதி வரை நான் பிரதிவாதி மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கட்டிடத்தில் பூச்சு வேலை செய்வதற்கு நாங்கள் தடுக்கிறோம் என்று பிரதிவாதி என் மீது புகார் கொடுத்தார். எத்தனை முறை அவ்வாறு புகார் கொடுத்தார் என்றால் இரண்டு முறை. பிரதிவாதி கட்டியுள்ள சுவரை ஒரே நாளில் 5 பேர் வைத்து பூச முடியுமா என்றால் முடியாது.

4. பொது பாதையில் கட்டிடம் கட்டுவது குறித்து வேறு யாருக்கும் ஆட்சேபணை இல்லை என்றால் அங்கு வேறும் யாரும் இல்லை. எதன் அடிப்படையில் பிரதிவாதி பொது பாதையை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று கூறுகிறேன் என்றால் அவர் இரவோடு இரவாக கற்களை எடுத்து வேறு இடத்தில் நட்டார். அதற்கு நான் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. அதனை புகைப்படம் எடுத்தேனா என்றால் இல்லை. நான் தாவா சொத்தினை சர்வேயர் வைத்து அளவீடு செய்யாமல் எதன் அடிப்படையில் பிரதிவாதி 3 அடி தள்ளி கட்டியுள்ளார் என்று சொல்கிறேன் என்றால் 1980ம் வருடம் எனக்கு பட்டா வழங்கும்போது அளந்து பார்த்து சர்வே கற்கள் வைத்தார்கள். அதன் அடிப்படையில் கூறுகிறேன். தாவா

சொத்து கிராமநத்தம் என்றால் சரிதான்.

5. 1994ம் வருடத்தில்தான் கிராமநத்தம் திட்டத்தில் எனக்கு பட்டா வழங்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை அளவீடு செய்தார் என்றால் சரிதான். அவர் அளவீடு செய்ததது சரியில்லை என்று மீண்டும் தலைமை சர்வேயர் வைத்து அளவீடு செய்தார்களா என்றால் இல்லை. நீதிமன்றத்திலிருந்து 2 முறை அளந்தார்கள் என்றால் இல்லை. எனது சார்பாக எனது வழக்கறிஞரும் எனது மகனும் இருந்தார்கள் என்றால் இல்லை.

6. நீதிமன்ற ஆணையர் இரு தரப்பினர் முன்னிலையில்தான் அளவீடு செய்வார்கள் என்றாலும் அளவீடு செய்யும்போது நான் உடனிருந்தும் தற்போது இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது வீட்டிற்கு முன்னால் தென்னை மரங்கள் வைத்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த 2 அறிக்கையிலும் நான்தான் ஆக்கிரமிப்பு செய்து மரங்கள் வைத்துள்ளேன் என்று கூறியுள்ளார்கள் என்றால் அது தவறானது. பிரதிவாதி அவரது வீட்டிற்கும் அவரது கொல்லைபுறத்திற்கும் சுற்றி மதில் சுவர் எழுப்பினால் அந்த பாதையை பயன்படுத்துவதற்கு நான் வைத்துள்ள தென்னை மரங்கள்தான் இடையூறாக இருக்கும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரை உள்ள ஆவணங்கள் எனது வீட்டிற்கு சம்பந்தமுள்ள ஆவணங்கள்

என்றால் சரிதான். வா.சா.ஆ.5ன் அடிப்படையில் மட்டுமே பிரதிவாதி பொது பாதையை ஆக்கிரமித்துள்ளார் என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல.

7. பிரதிவாதி பொது பாதையை ஆக்கிரமித்துள்ளார் என்று காண்ப்பிபதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது வழக்கறிஞரிடம் இருக்கிறது. பிரதிவாதி என் மீது அவ்வபோது புகார் கொடுத்ததால் அவர் மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த வழக்கிற்கு வழக்கு முகாந்திரம் இல்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதி அவரது நிலத்தில்தான் வீடு கட்டியுள்ளார் என்றாலும் அவர் பொது பாதையை ஆக்கிரமிக்கவில்லை என்றாலும் நான் அவர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

8. பிரதிவாதி கட்டியுள்ள வீட்டின் 3 பக்கங்களிலும் பூச்சு வேலை முடிந்து தற்போது வழக்கு சம்பந்தப்பட்ட 1 பக்கம் மட்டும்தான் பூச்சு வேலை செய்யவில்லை என்றால் சரிதான். பூச்சு வேலை ஆரம்பிக்கும்போதுதான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு 2020ம் வருடத்திலிருந்து தற்போது வரை பூச்சு வேலை செய்யாததால் பிரதிவாதி வீட்டின் ஓதம் வருகிறது என்றாலும் அவருக்கு பாதிப்பு ஏற்படுத்த வேண்டுமென்று தற்போது வரை இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றாலும் சரியல்ல.

**9**.பிரதிவாதி உண்மையிலேயே ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அவர்மீது நான் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் பிரதிவாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும் தவறான வழக்குமூலம் கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்ளதுள்ளேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் முகாந்திரம் இல்லை என்றாலும் எனவே இந்த வழக்கை அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றாலும் சரியல்ல.